பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை
28 08 2024 **WEDNESDAY** 7 15 **PM**
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. மகளிருக்கு எதிரான குற்றங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டியது அவசியம் என்று குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கூறியுள்ளார்.
2. மத்திய அமைச்சரவை இன்று மேற்கொண்ட முடிவுகள், வேளாண், தகவல் ஒலிபரப்பு, ரயில்வே மற்றும் மின்துறையின் வளர்ச்சிக்கு உத்வேகம் அளிக்கும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
3. நாடுமுழுவதும் கடந்த ஆண்டில் 5 ஆயிரத்து 300 கிலோமீட்டர் தொலைவிற்கு புதிய ரயில் வழித்தடங்கள் அமைக்கப்பட்டதாக ரயில்வே அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.
4. தமிழகத்தில் 95 ஆயிரம் புதிய குடும்ப அட்டைகள் அச்சிடப்பட்டு பயனாளிகளுக்கு வழங்குவதற்கு தயார் நிலையில் உள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது
5. உலக இளையோர் தடகள சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Amanat Kamboj** இறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

>>>><<<<

கொல்கத்தாவில் பெண் பயிற்சி மருத்துவர் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவம், நாட்டையே அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளதாக குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்வது ஏற்புடையதல்ல என்று கூறியுள்ளார்.

இவற்றுக்கான காரணங்களை கண்டறிந்து, அவற்றை தடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

மகளிருக்கு எதிரான குற்றங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டியது அவசியம் என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இதற்காக அனைவரும் உறுதியேற்றுக் கொள்ள வேண்டும் என்றும் திருமதி. திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

>>>><<<<

நாடுமுழுவதும் மருத்துவர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக மேற்கொள்ள வேண்டிய உடனடி நடவடிக்கைகள் குறித்து மத்திய உள்துறை செயலர் திரு. கோவிந்த் மோகன், சுகாதாரத்துறை செயலர் திரு. அபூர்வ சந்திரா ஆகியோர், மாநிலங்களின் தலைமைச்செயலாளர்களுடன் இன்று ஆலோசனை மேற்கொண்டனர்.

காவல்துறை தலைவர்களும் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்றனர்.

கண்காணிப்பு கேமராக்களை பொருத்துவது, பாதுகாப்பை வலுப்படுத்துவது உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து இதில் விவாதிக்கப்பட்டது.

இதுதொடர்பாக புதிய யோசனைகளை பரிந்துரைக்குமாறு மாநில அரசுகளை திரு. அபூர்வ சந்திரா கேட்டுக் கொண்டார்.

மருத்துவமனைகளின் பாதுகாப்பு குறித்து மாவட்ட ஆட்சியர்கள், காவல்துறை அதிகாரிகளுடன் இணைந்து தணிக்கை மேற்கொள்வது குறித்தும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>><<<<

ரயில்வே சார்பில் மேற்கொள்ளப்படவுள்ள 6 ஆயிரத்து 456 கோடி ரூபாய் மதிப்பிலான மூன்று திட்டங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இன்று புதுதில்லியில் பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.
இந்த திட்டங்கள் அடுத்த ஐந்தாண்டுகளுக்குள் நிறைவடையும் என்று மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.
தேசிய தொழில் வழித்தட மேம்பாட்டு திட்டத்தின் கீழ், 28 ஆயிரத்து 602 கோடி ரூபாய் முதலீட்டில் 12 நவீன தொழில் நகரங்களை ஏற்படுத்துவதற்கும் இக்கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
10 மாநிலங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் இந்த நவீன தொழில் நகரங்கள் இடம்பெறுவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.
நாடுமுழுவதும் 234 நகரங்களில் 730 தனியார் பண்பலை ஒலிபரப்பை தொடங்குவதற்கான மின்னணு ஏலம் நடத்துவதற்கும் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேளாண் கட்டமைப்பு நிதியத்தை விரிவுபடுத்துவதற்கும் இந்த அமைச்சரவை கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இதேபோல், நீர்மின் திட்டங்களை செயல்படுத்தும் வடகிழக்கு மாநிலங்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்திற்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
4 ஆயிரத்து 136 கோடி ரூபாய் செலவில் இந்த திட்டம் நடப்பு நிதியாண்டில் தொடங்கி, அடுத்த ஐந்தாண்டுகளுக்கு செயல்படுத்தப்படவுள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>><<<<

மத்திய அமைச்சரவை இன்று மேற்கொண்ட முடிவுகள், வேளாண், தகவல் ஒலிபரப்பு, ரயில்வே மற்றும் மின்துறையின் வளர்ச்சிக்கு உத்வேகம் அளிக்கும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை பதிவு செய்துள்ள அவர், விவசாயிகளின் நலனுக்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்துள்ளது இதனை வெளிப்படுத்தியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

வடகிழக்கு மாநிலங்களுக்கான திட்டங்கள், அம்மாநிலங்களின் வளர்ச்சிக்கும், புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கும் உதவிடும் என்று அவர் கூறியுள்ளார்.

புதிய பண்பலை அலைவரிசைகளை தொடங்குவதற்கான ஏலத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டிருப்பது, சம்பந்தப்பட்ட பகுதிகளின் வட்டார மொழி மேம்பாட்டிற்கு உதவிடும் என்றும் திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.

>>>><<<<

நாடுமுழுவதும் கடந்த ஆண்டில் 5 ஆயிரத்து 300 கிலோமீட்டர் தொலைவிற்கு புதிய ரயில் வழித்தடங்கள் அமைக்கப்பட்டதாக ரயில்வே அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மத்தியில் பிஜேபிதலைமையிலான அரசு பொறுப்பேற்பதற்கு முன்னர், நாளொன்றுக்கு 4 கிலோமீட்டர் தொலைவுக்கு தான் ரயில் வழித்தடங்கள் ஏற்படுத்தப்பட்டதாக தெரிவித்தார்.

தற்போது, நாளொன்றுக்கு 14 புள்ளி ஐந்து கிலோமீட்டர் அளவுக்கு ரயில் வழித்தடங்கள் அமைக்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

ஒப்புதல் அளிக்கப்பட்ட ரயில்வே திட்டங்களுக்கான பணிகள், அடுத்த ஐந்தாண்டுகளுக்குள் நிறைவடையும் என்றும் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

>>>><<<<

சாலை விபத்துகளை குறைப்பதற்கு மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் சாலை பாதுகாப்பு தொடர்பான விருது வழங்கும் நிகழ்ச்சி மற்றும் மாநாட்டில் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

சாலை பாதுகாப்பு குறித்த தணிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆண்டொன்றுக்கு 5 லட்சம் சாலை விபத்துகள் ஏற்படுவதாகவும், இதில் ஒரு லட்சத்து 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழப்பதாகவும் அவர் கூறினார்.

இதனை தடுக்கும் நோக்கில் பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் திரு. நிதின் கட்கரி தெரிவித்தார்.

>>>><<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தொலைநோக்கு தலைமைப் பண்பிற்கு எடுத்துக் காட்டாக, வங்கிக் கணக்கு திட்டம் திகழ்கிறது என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நிதி சேவைகளை மக்களுக்கு வழங்குவதில் மிகப் பெரிய மாற்றத்தை இந்த திட்டம் கொண்டு வந்துள்ளதாக தெரிவித்தார்.

மத்திய அரசு திட்டங்களின் நிதியுதவிகள் இடைத்தரகர்களின் குறுக்கீடு இன்றி, நேரடியாக பயனாளிகளின் வங்கிக் கணக்கில் செலுத்துவதற்கு இந்த திட்டம் வகை செய்துள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவு திட்டத்தின் பணப்பலன்கள் நேரடியாக அவர்களின் வங்கிக்கணக்கில் செலுத்தப்படுவதையும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

>>>><<<<

மருந்து துறை தொடர் வளர்ச்சியை கண்டு வருவதாக தொழில் மற்றும் வர்த்தகத்துறை இணையமைச்சர் திரு. ஜிதின் பிரசாதா கூறியுள்ளார்.

உத்தரபிரதேச மாநிலம், நொய்டாவில் சர்வதேச மருந்து கண்காட்சியை இன்று தொடங்கி வைத்து அவர் பேசினார்.

சர்வதேச அளவில் குறைந்த செலவில் தரமான மருந்துகள் நம் நாட்டில் உற்பத்தி செய்யப்படுவதாக அவர் தெரிவித்தார்.

இதன் காரணமாக, மருந்து உற்பத்தி துறையில் இந்தியா முன்னணியில் உள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் மருந்து துறை முக்கிய பங்கு வகிப்பதாகவும் அவர் கூறினார்.

10 ஆயிரத்து 500 மருந்து உற்பத்தி நிறுவனங்கள் செயல்பாட்டில் உள்ளதாகவும் திரு. ஜிதின் பிரசாதா தெரிவித்தார்.

>>>><<<<

தமிழகத்தில் 95 ஆயிரம் புதிய குடும்ப அட்டைகள் அச்சிடப்பட்டு பயனாளிகளுக்கு வழங்குவதற்கு தயார் நிலையில் உள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.

மாநிலம் முழுவதும், கடந்த மூன்றாண்டுகளில் மட்டும் 16 லட்சத்திற்கும் மேற்பட்ட புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளதாக உணவுத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

பொதுமக்களின் கோரிக்கைகளை ஏற்று, 713 முழுநேர நியாயவிலைக் கடைகளும், ஆயிரத்து 340 பகுதி நேர நியாயவிலைக் கடைகளும் புதிதாக தொடங்கப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>><<<<

கிருஷ்ணகிரி தனியார் பள்ளியில் போலி என்சிசி முகாமில் மாணவிகளுக்கு பாலியல் தொல்லை அளித்தது தொடர்பான வழக்கின் புலன் விசாரணை அறிக்கையை அடுத்த மாதம் 4ஆம் தேதி தாக்கல் செய்ய வேண்டும் என்று தமிழக அரசுக்கு, சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பான மனுவை விசாரணை செய்த பொறுப்பு தலைமை நீதிபதி திரு. கிருஷ்ணகுமார், நீதிபதி திரு. பாலாஜி அமர்வு இன்று இதற்கான உத்தரவை பிறப்பித்தது.

>>>><<<<

ராக்கெட்டிலிருந்து செயற்கைக்கோளை பிரிக்கும் இலகுரக அதிநவீன தொழில்நுட்பம் குறித்த உரையாடல் நிகழ்ச்சிக்கு சென்னை அகில இந்திய வானொலியின் மாநில செய்திப் பிரிவு ஏற்பாடு செய்துள்ளது.

இந்த தொழில்நுட்பத்தை கண்டுபிடித்த ராக்கெட் விஞ்ஞானி கிளிண்டன் ஆண்டனியுடன் எமது செய்தியாளர் எஸ். ஜாய் பங்கேற்கும் இந்த நிகழ்ச்சி நாளை காலை மணி 8.30 முதல் 9.00 மணிவரை ஒலிபரப்பாகும்.

பிரதான அலைவரிசையில் ஒலிபரப்பாகும் இந்த நிகழ்ச்சியை மாநிலத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் அஞ்சல் செய்யும்.

>>>><<<<

உலக இளையோர் தடகள சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Amanat Kamboj** இறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

பெருவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் வட்டு எறிதல் பிரிவின் தொடக்க சுற்றில் பெற்ற கூடுதல் புள்ளிகள் அடிப்படையில் அவர் இறுதிச்சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளார்.

>>>><<<<

ஆசிய சாம்பியன் கோப்பை ஹாக்கிப் போட்டிக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

ஹர்மன் ப்ரீத்சிங் தலைமையிலான இந்த அணியில், 18 பேர் இடம்பெற்றுள்ளனர்.

இப்போட்டி சீனாவில் அடுத்த மாதம் 8ஆம் தேதி தொடங்கி 17ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

>>>><<<<

பாரிஸ் பாராலிம்பிக் போட்டிகள் வண்ணமிகு கலைநிகழ்ச்சிகளுடன் இன்று தொடங்குகின்றன.

இந்திய நேரப்படி இரவு மணி 11.30-க்கு நடைபெறவுள்ள தொடக்க விழா அணிவகுப்பில் இந்திய தேசியக்கொடியை **Sumit Antil**-ம், **Bhagyashri Jadhav**-ம் ஏந்திச் செல்லவுள்ளனர்.

அடுத்த மாதம் 8ஆம் தேதிவரை நடைபெறவுள்ள இப்போட்டிகளில் இந்தியாவின் சார்பில் 84 பேர் பங்கேற்கின்றனர்.

>>>><<<<

இந்தோனேஷியா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Rakshitha Sree** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

>>>>END<<<<